**செய்தி வெளியீடு எண்: 833** **நாள்: 26.11.2019**

**<u>மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ் அவர்களின் அறிக்கை</u>**

பொது விநியோகத் திட்டத்தில் தற்பொழுது **10,19,491** குடும்ப அட்டைகள் சர்க்கரை குடும்ப அட்டைகளாக உள்ளன. இந்த குடும்ப அட்டைகளை வைத்திருப்பவர்களில், தங்கள் குடும்ப அட்டைகளை தகுதியின் அடிப்படையில் அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்ய விரும்பினால், அதற்கான விண்ணப்பங்களை தங்களுடைய குடும்ப அட்டையின் நகலினை இணைத்து, **26.11.2019** வரை www.tnpds.gov.in என்ற இணைய முகவரியிலும், சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் மற்றும் உதவி ஆணையர்களிடமும் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த கால அவகாசத்தை நீட்டிப்பு செய்ய வேண்டும் என வரப்பெற்ற குடும்ப அட்டைதாரர்களின் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி மேலும், **3** நாட்கள் அதாவது **29.11.2019** வரை கால நீட்டிப்பு வழங்கப்படுகிறது. இதன் பிறகு கால அவகாசம் வழங்கப்படமாட்டாது. எனவே சர்க்கரை அட்டையை அரிசி அட்டையாக மாற்றம் செய்ய விரும்புவோர் தங்களின் விண்ணப்பங்களை அளிக்க இணைய முகவரி, வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும் மட்டுமின்றி, சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளிலும் விண்ணப்பங்களை நேரடியாக வழங்கலாம் எனவும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**